மதுரை சட்டக் கல்லூரியில் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கழக சட்டத்துறை சார்பில் மாநில சட்டத்துறை செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம்.பி., துவக்கி வைத்த பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற சட்டக்கல்லூரி மாணவ, மாணவியருக்கு சட்டத்துறை அமைச்சர் ரகுபதி பரிசுகள் வழங்கி பாராட்டிய போது எடுத்தபடம். இந்நிகழ்வில் மாநில சட்டத்துறை துணை செயலாளர்கள் முன்னாள் எம்.எல்.ஏ., ராதாகிருஷ்ணன், பச்சையப்பன், சரவணன், சூர்யா, வெற்றி கொண்டான், அருள்மொழி, மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர்கள் வழக்கறிஞர் கலாநிதி, தேவசேனன், சிவனேசன் ஆகியோர் பங்கேற்றனர்.

### ஆரியம் - திராவிடம் பற்றி உளறி

# வரலாற்றை அழிக்கத் துடிக்கிறார் ஆளுநர் ஆர்.என்.ரவி!

## ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கண்டனம்!

சென்னை, அக். 25 -

ஆரியம் - திராவிடம் பற்றி உளறி வரலாற்றை அழிக்கத் துடிக்கிறார் ஆளுநர் ஆர்.என்.ரவி என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ வெளியிட்டுள்ள அறிக்கையில் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் அறிக்கை வருமாறு:

திருச்சியில் உள்ள தனியார் ஐ.ஏ.எஸ். பயிற்சி மையத்தின் சார்பில், மருது சகோதரர்கள் நினைவு நாள் விழா நேற்று முன் தினம் நடைபெற்றது. இதில், தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி கலந்து கொண்டு பேசிய போது, "தமிழகத்தின் உண்மையான வரலாற்றை அழிப்பதற்கு இங்கு தொடர்ச்சியான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. உண்மையான வரலாற்றை மறைத்து அதற்கு நிகரான வரலாற்றை எழுத முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

அவர்கள், தமிழகத்தில் இன ரீதியாக பிரிவினை இருப்பது போன்றதொரு தவறான தகவலை உருவாக்கினார்கள்.

திராவிடம் ஆரியம் என்ற இனங்கள் இருப்பது போன்ற பிரிவை உருவாக்கினார்கள். திராவிடர்கள் என்பவர்கள் தனி இனம் என்ற கருத்தாக்கத்தின் தந்தை ராபர்ட் கால்டுவெல்.

உண்மையில் இங்கு ஆரியம், திராவிடம் கிடையாது. இந்தியாவைப் பிரித்தாளும் சூழ்ச்சிக்கான பிரிட்டிஷாரின் உத்திகளில் இதுவும் ஒன்று.

இன்றளவும் கொண்டாடப்படும் சிலர், லண்டனுக்குச் சென்று பிரிட்டிஷாரிடம் இந்தியாவுக்கு சுதந்திரம் கொடுக்கக்கூடாது என்று கோரிக்கை வைத்துள்ளனர். இதெல்லாம் மறைக்கப்பட்ட வரலாறு" என்று பேசி உள்ளார். தமிழ்நாட்டின் வரலாற்றை அறியாமல் தொடர்ந்து ஆளுநர் ஆர். என். ரவி உளறிக் கொட்டி வருவதில் இதுவும் ஒன்றாகும்.

ரிக் வேதம், அவ்வேதத்திற்குச் சொந்தக்காரர்களை 'ஆரியர்' என்றும் மற்றவர்களை 'அனாரியர்' என்றும் குறிப்பிடுகிறது. ஆரியரை எதிர்த்த மக்களை 'தாசர்' என்று குறிப்பிடுகிறது. தோற்கடிக்கப்பட்ட அனாரியர் (ஆரியர் அல்லாதவர்) சமூகத்தின் நாலாம் பிரிவாக சூத்திரர் (Sudra) ஆக்கப்பட்ட சூத்திரர்களும் இழிந்த பிரிவினர் ஆவர்.

அனாரியர் என்றும், தாசர் என்றும், அசுரர் என்றும் பின்னர் வர்ண சாதி முறையில் சூத்திரர் பஞ்சமர் என்றும் ஒடுக்கு முறைக்கு இந்தியத் துணைக் கண்டத்து மக்கள் உள்ளாகி உள்ளமைக்கு இலக்கியப் பதிவுகள் இருக்கின்றன.

'திராவிட' என்ற சொல் மகாபாரதத்தில் வருகிறது. அது தென்னகப் பகுதியைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டு இருக்கிறது.

திராவிடர் பற்றி மனுதர்மம் பேசுகிறது. மனு சாஸ்திரத்தில் (X,43, 44) சாதி இறக்கம் செய்யப்பட்ட சத்திரியர்களைப் பற்றி வருகிறது. திராவிடர்கள் சத்திரியர்களாக இருந்தனர் என்றும், பின்னர் விருசாலர்களாக (சூத்திரர்கள்) தாழ்ந்தார்கள் என்றும், "திராவிடச் சத்திரியர்கள், புனிதச் சடங்குகளை விட்டுவிட்டனர் என்றும், அதனாலேயே தாழ்ந்தார்கள்" என்றும் மனுநூல் குறிப்பிடுகிறது.

இந்தியத் துணைக் கண்டத்தின் தென்பகுதியை 'திராவிடம்' என்று வடமொழியாளர்கள் அழைக்கும் போக்கு நீண்ட காலமாக, மகாபாரதம் உள்ளிட்ட நூல்களில் பேசப்பட்ட ஒன்றாக இருந்து வந்திருக்கிறது.

தமிழ் மொழி 'திராவிடம்' என்று வடவர்களால், சமஸ்கிருதம் பேசிய ஆரியர்களால் அழைக்கப்பட்டது. தமிழ் அறிஞர்களே தமிழை 'திராவிடம்' என்று அழைக்கும் போக்கு கி.பி. 17ஆம் நூற்றாண்டு அளவிலே பரவலானது. கி.பி. 17ஆம் நூற்றாண்டில், தாயுமானவர் தமிழைத் 'திராவிடர்' என்று குறிப்பிடுகிறார்.

கால்டுவெல்லின் ஒப்பிலக்கணம்(1856) வெளிவரும் முன்பு, தமிழ்மொழி 'திராவிடம்' என்றே தமிழறிஞர்களால் வழங்கப்பட்டது.

இந்த வரலாறுகளை மறைத்து ஆர்.எஸ்.எஸ் என்ன கட்டமைக்கிறதோ அதனை விளம்பரம் செய்யும் முகவராக ஆர்.என். ரவி செயல்படுகிறார்.

ஆங்கிலேயர்களின் தாள் வணங்கி, ஏகாதிபத்திய வெள்ளை அரசின் கடைக்கண் பார்வைக்காக ஏங்கிக் கிடந்த கூட்டத்தைக் கொண்டாடும் ஆளுநர் ரவியிடம் இது போன்ற கருத்துகளைத்தான் எதிர்பார்க்க முடியும். அவை ஒரு போதும் உண்மை ஆகாது.

இவ்வாறு வைகோ அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

### புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி, மாணவர் அணி சார்பில்

# 'நீட்' தேர்விலிருந்து விலக்களிக்கக் கோரி கையெழுத்து இயக்கம்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி துவக்கி வைத்தார்! டாக்டர் அ.சுபேர்கான் - டாக்டர் எஸ்.ஆர்.அண்ணாமலை பங்கேற்பு!

புதுக்கோட்டை, அக் 25-

புதுக்கோட்டை மாலையீடு கற்பக விநாயகா திருமண மண்டபத்தில் தி.மு.க. இளைஞரணிச் செயலாளரும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவர் அணிகளின் சார்பில் நீட் தேர்விலிருந்து விலக்களிக்க க்கோரி ஐம்பது லட்சம் நபர்கள் கையெழுத்து இயக்கம் தொடக்க விழா நிகழ்ச்சி புதுக்கோட்டை மாலையீடு கற்பக விநாயகா திருமண மகாலில் புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் தமிழக சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தொடங்கி வைத்தார்.

தலைமைக் கழகத்தின் சார்பில் கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மாநில தலைவர் டாக்டர்அ. சுபேர்கான் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி னார்.

இந்நிகழ்வுகளில் கழக மருத்துவ அணி மாநில துணைச் செயலாளர் டாக்டர் எஸ்.ஆர்.அண்ணாமலை, மாவட்ட அவைத் தலைவர் அ.சுப்பிரமணியன், மாவட்ட துணைச் செயலாளர்கள் ஞான.இளங்கோவன், ஸ்ரீதேவி அண்ணாத்துரை, அடைக்கலம், மாவட்ட பொருளாளர் ஜெ.அபுதாகீர், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆர்.ஆர். கே.கலைமணி, எஸ்.ஜெயராமன், பொதுக்குழு உறுப்பினர்கள் சீனி.பழனியப்பன், கே.எம்.சுப்பிரமணியன், ஆர்.வி.செல்வம், ஒன்றியச் செயலாளர்கள் உதயம் சண்முகம், வே.பொன்துரை, சக்தி ராமசாமி, பொன், கணேசன், டி.தங்கமணி, அ அடைக்கலமணி, அ.முத்து, அரு.வடிவேல், எஸ்.எம்.சீனியார், கே.எஸ். ரவி, குமார்(எ) துரைக் கண்ணு, ஆறு.சிதம்பரம், ஆர்.கணேசன், அறந்தாங்கி நகர செயலாளர் க.ராஜேந்திரன், கே.சி.சிவக்குமார்,

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் த.மணி ராஜன், கலைச்செல்வன், டாக்டர் சுதர்சன், பாத்திமா பீவி, ரம்யா பாலு, மணிகண்டன், கே.ஆர்.ராமசாமி, சர்வேயர் மா.நடேசன், சிவ.பால இளங்கோ, தி.முத்து, எம்.ஜி (எ) ராமச்சந்திரன், இ.ஏ.பெரியகருப்பன், கண்ணன், நசுருதீன். இரா.தமிழ்ராசு, அருண்குமார், கவிக்குமார், முகம்மது ரபீக், இளையராஜா, அ.பழனியப்பன், சுப.செல்வம், முல்லை ரமேஷ், கே.வி. எஸ்.ஏ.மோகன், பாரதிராஜா உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

மேலும் இந்த நிகழ்வில் காணொளி காட்சி மூலம் சென்னையிலிருந்து கழக இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற நீட் விலக்கு நம் இலக்கு என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கம் காணொளி காட்சியில் ஒளிபரப்பப்பட்டது. மேலும் இந்த கூட்டத்தில் கலந்து கொண்ட தி.மு.க. இளைஞர் அணி மற்றும் பல்வேறு அணியைச் சேர்ந்த நிர்வாகிகள் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசிய பேச்சை ஆர்வத்துடன் பார்த்துவிட்டு பின்னர் நீட்டுக்கு எதிராக தபால் அட்டையில் கையெழுத்திட்டு பெட்டியில் போட்டனர்.

கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினரும், மாநில விளையாட்டு மேம்பாட்டு துணைச் செயலாளருமான டாக்டர். பொன். கௌதமசிகாமணி விழுப்புரம் மாம்பழப்பட்டு ரோடு, 25வது வார்டு முன்னாள் தி.மு.க. பிரதிநிதி எம்.குள்ளராஜ் அவர்களின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தி அவரைப் பிரிந்து வாடும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். மாநில ஆதிதிராவிடர் நலக் குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், நகர மன்ற துணைத் தலைவர் சித்திக் அலி, நகர பொருளாளர் இளங்கோ, மாவட்ட அணி நிர்வாகிகள் தொண்டர் அணி கபாலி, அமரஜி, மாணவர் அணி ஸ்ரீ வினோத், அமைப்புசாரா ஓட்டுநர் அணி பாலு கார்த்தி, வர்த்தக அணி கோல்டு வெங்கடேசன்,நட. ஆனந்த், தொழிலாளர் அணி சுரேஷ் பாபு, தகவல் தொழில்நுட்ப அணி ப.அன்பரசு, ஆதிதிராவிடர் நலக் குழு அணி செல்வ பிரேம், விளையாட்டு மேம்பாட்டு அணி ஆர்.பி.பரத், இளைஞர் அணி செ.மணிகண்டன், சங்கர், வழக்கறிஞர் காளிதாஸ், கே.ஆர்.பி.பிரவின், கோகுல் உள்ளிட்ட பலர் அஞ்சலி செலுத்தினர்.

### பூண்டி நீர்த்தேக்கத்தில் நீர் இருப்பு விவரம்! மாவட்ட ஆட்சியர் நேரில் ஆய்வு!

சென்னை, அக். 25 -

பூண்டி, சத்தியமூர்த்தி நீர்த்தேக்கம் சென்னை மக்களின் குடிநீர் ஆதாரமாக உள்ளது. இந்த ஏரிக்கு ஆந்திர மாநிலம் கண்டலேறு அணையிலிருந்து வரும் கிருஷ்ணா நீர் முக்கிய நீர் ஆதாரமாகும். இங்கு வரும் நீரை அப்படியே இணைப்பு கால்வாய்கள் வழியாக செம்பரம்பாக்கம், செங்குன்றம், சோழவரம் ஆகிய ஏரிகளுக்கு அனுப்பி சேகரிக்கப்படுகிறது.

இந்த நிலையில் வடகிழக்கு பருவமழை தொடங்கியுள்ள நிலையில் பூண்டி நீர்த்தேக்கத்தில் நீர் இருப்பு விவரங்களை அறிந்து கொள்ளும் வகையில் நீர் வளத்துறை அதிகாரிகளுடன் மாவட்ட ஆட்சியர் பிரபு சங்கர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது, அங்கு வரைபட உதவியுடன் ஆறுகளின் விவரங்கள், நீர்வரத்து கால்வாய்கள். பூண்டி நீர்த்தேக்கத்திலிருந்து இணைப்பு கால்வாய்கள் மூலம் அனுப்புதல், நீரின் கொள்ளளவு போன்றவை குறித்து நீர்வளத்துறை அதிகாரிகள் விவரமாக எடுத்துரைத்தனர்.

## வலைதளத்தில் வலம் வருவது!

# 'நீட்' தேர்வு எதிர்ப்புப் போராட்டத்தில் தி.மு.க. வெற்றி பெறும்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேச்சு!

சிவகங்கை, அக். 25 -

தமிழகத்தில் நீட் தேர்வுக்கு விலக்கு கோரி குடியரசு தலைவருக்கு 50நாளில் 50லட்சம் பேர் அஞ்சல் அட்டை கையெழுத்து பெறும் இயக்கத்தினை மாவட்ட தலைநகரங்களில் நடத்திடுமாறு அமைச்சரும், இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டிருந்தார். அவரது உத்தரவின்படி சிவகங்கை மாவட்ட இளைஞரணி, மாணவரணி, மருத்துவரணி இணைந்து கையெழுத்து இயக்கம் சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளரும், கூட்டுறவுத்துறை அமைச்சருமான கேஆர்.பெரியகருப்பன் தலைமையில் சிவகங்கையில் நடைபெற்றது.

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார் கையெழுத்து இயக்கம் குறித்து விளக்கி வரவேற்றுப் பேசினார். இந்த கையெழுத்து இயக்கம் குறித்து கழக கொள்கைப் பரப்பு செயலாளர் முனைவர் சபாபதி மோகன், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் த.சேங்கைமாறன், கே.எஸ்.எம்.மணிமுத்து ஆகியோர் பேசினர்.

அமைச்சர் கேஆர். பெரிய கருப்பன் கழகத்தின் சார்பில் நீட் எதிர்ப்பு முதல் கையெழுத்தினை போட்டு துவக்கி வைத்துப் பேசியதாவது.

தமிழக முதல்வர் அவர்கள் நீட் தேர்வுக்கு எதிராக. பல்வேறு வகையில் போராட்டங்களை அறிவித்து தொடர்ந்து போராடி வருகிறார். ஏழை, எளிய மக்களின் பிள்ளைகளின் மருத்துவ கனவு இதன்மூலம் பாதிக்கப்படுகிறது. என்பதற்காகவே தமிழகத்திற்கு நீட்தேர்வில் விலக்குக் கோரி வருகிறார். இதற்காக பல்வேறு முறையில் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றது. இதில்

குடியரசு தலைவருக்கு சட்டமன்றத்தில் ஒட்டுமொத்தமாக தீர்மானம் நிறைவேற்றி தமிழகத்திற்கு நீட்தேர்விலி ருந்து சிறப்பு விலக்கு கேட்டு தீர்மானம் அனுப்பப்பட்டுள்ளது. அனுப்பிய தீர்மானத்தை விரைவாக குடியரசுத் தலைவர் அனுமதி தருவதற்காக இன்று ஒருநாளில் ஒரு லட்சம் கையெழுத்து பெறும் வகையில் 50நாட்களில் 50 லட்சம் கையெழுத்து இயக்கத்தினை அறிவித்து உள்ளார்.

எனவே இந்த கையெழுத்து இயக்கத்தில் இளைஞர் அணி மாணவரணி, மருத்துவ அணி ஆகிய மூன்று அணிகள் ஒன்றாக இணைந்து மாணவ மாண விகளிடம் கையெழுத்து பெற்று உரிய இலக்கினை அடைந்திடவேண்டும். அதை மாநில தலைமைக்கு அனுப்பி வைக்க வேண்டும். சிவகங்கை மாவட்டம் தலைமைக் கழகம் அறிவித்த அனைத்து அறிவிப்புகளையும் நிறைவேற்றி உள்ளது. அதை தொடர்ந்து நிறைவேற்றிடும் வகையில் இந்த அணியினர் சிறப்பாக இதில் பணியாற்றிடவேண்டும். இதுவரை தமிழகத்தில் நீட் தேர்விற்காக விலக்கு கேட்டு நடைபெற்ற பல்வேறு போராட்டத்தில் 29,க்கும் மேற்பட்டவர்கள் உயிர்இழந்துள்ளார்கள். அதற்கு முற்றுப்புள்ளி வைத்திடும் வகையில் இந்த கையெழுத்து இயக்கம் வெற்றி பெறவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேசினார்.

நிகழ்ச்சிக்கு முன்னிலை வகித்த கொள்கை பரப்புச் செயலாளர் முனைவர் சபாபதி மோகன் பேசியதாவது.

இது ஒரு நெடிய போராட்டம் ஆகும். இதில் நாம் நிச்சயம் வெற்றி பெறுவோம். ஒரு நாளைக்கு ஒரு லட்சம் விதம் 50 நாட்களில் 50 லட்சம் கையெழுத்து பெற வேண்டும். இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பிற்கு தனித்துவம் உண்டு. முன்பு இந்திய திர்ப்பு போராட்டம் சமீபத்தில் மஞ்சுவிரட்டு போராட்டம் ஆகியவற்றில் மாணவர்கள் பங்கேற்று வெற்றி பெற்றுள்ளோம். தமிழகத்தை தவிர எந்த வேறு மாநிலத்திலும்69சத இட ஒதுக்கீடு இல்லை. தமிழ் மொழி ஆங்கிலம் ஆட்சிமொழி என்பது தமிழகத்தில் தான் உள்ளது. நாம் எதிலும் தோற்றதில்லை. யாருக்கும் பயந்தவர்கள் இல்லை.

ஏழை, எளிய மாணவர்களின் மருத்துவக் கனவு நிறைவேறும் என்பதற்காக முதல்வர் தளபதி அவர்களும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும் போராடி வருகிறார்கள். இது பெரிய வெற்றியை பெறும்.

2019 ல்ஒரு செங்கல்லை வைத்து 39 எம்.பி.க்களை வெற்றிபெற்றோம். அதற்குகாரணம் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிரச்சாரம்ஆகும். அதேபோல் இந்த கையெழுத்து இயக்கம் விரைவில் வெற்றி பெறும். பொறியியல் கல்லூரிக்கு நுழைவுத் தேர்வு வந்த பொழுது அதை கடுமையாக எதிர்த்து அதை வரவிடாமல் செய்தவர் அப்போதைய முதல்வர் தலைவர் கலைஞர் ஆவார்.

தமிழக முதல்வர் அவர்கள் அகில இந்திய பட்டியலிலிருந்து கல்வியை மாநில பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று தொடர்ந்து போராடி வருகிறார்கள். அதுவும் வெற்றிபெறும். எனவே இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவர் அணி நிர்வாகிகள் சேர்ந்து இந்த கையெழுத்து இயக்கத்தினை இம் மாவட்டத்தில் சிறப்பாக நடத்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு முனைவர் சபாபதி மோகன் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ.மாநில மாணவரணி இணைச்செயலாளர். திருமதி பூரணசங்கீதா,

முன்னாள் எம்.எல்.ஏ. எஸ்.மாரியப்பன் கென்னடி, நகர்கழக செயலாளர்கள் சி.எம்.துரை ஆனந்த், க.பொன்னுச் சாமி,என். குணசேகரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் எஸ்.முத்துதுரை,

மாவட்ட சுற்றுச் சூழல் அணி அமைப்பாளர் வல்லபாய், மாவட்ட மாணவரணி துணைஅமைப்பாளர் முகமது கனி, இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் எஸ். எம். மதிவாணன், பொற்கோ கார்த்தி, சேதுபதிராஜா கே.எம். பொற்கோ, பரணிகிட்டு, முகமதுமகாதீர், ஒன்றிய செயலாளர்கள் எம்.ஜெயராமன்,திருமலை முத்துராம லிங்கம், யோககிருஸ்ணகுமார் ஆர்.எம்.

கென்னடி, , பூபால சிங்கம் கே.பாலசுப்பிர மணியன். ,துரை. ராஜாமணி ஒன்றிய துணை செயலாளர் முத்துக்குமார், புதூர் கண்ணன், மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன், துணை அமைப்பாளர் மார்கரெட்கமலா, ஒன்றிய நகர பேரூர் கழக அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டார்கள்.

### தஞ்சை மத்திய மாவட்ட மருத்துவ அணி

# துணை அமைப்பாளர் மருத்துவர் ஆர்.சதிஷ் மணவிழா!

## அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி- துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. வாழ்த்துரை!

தஞ்சாவூர், அக்.25-

தஞ்சை மத்திய மாவட்ட மருத்துவ அணியின் துணை அமைப்பாளர் மருத்துவர் சதிஷ் திருமணத்தில் அமைச்சர் அன்பில் மகேஸ்பொய்யாமொழி மற்றும் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் பங்கேற்கின்றனர்.

வருகின்ற 27.10.2013 வெள்ளிக்கிழமை காலை 09.00 மணிக்கு தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க. மருத்துவர் அணியில் துணை அமைப்பாளரும், பி.ரெங்கநாதன் டெய்சிராணி இவர்களின் மகனுமான மருத்துவர் ஆர். சதிஷ்க்கும், ஒரத்தநாடு எஸ்.கோவிந்தராஜ் செந்தமிழ்ச்செல்வி தம்பதியரின் மகள் ஜி.பானுப்பிரியாவுக்கும் தஞ்சாவூர் காவேரி டீலக்ஸ் திருமண மண்டபத்தில் திருமணம் நடைபெற உள்ளது.

இத்திருமண விழாவில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, தஞ்சை மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ., கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர்கள் எஸ். எஸ்.பழநிமாணிக்கம், எல். கணேசன், மருத்துவ அணி மாநில செயலாளர் மரு. எழிலன் நாகநாதன், மருத்துவ அணி தலைவர் கனிமொழி என்.வி.என்.சோமு, டி.கே.ஜி.நீலமேகம் எம். எல்.ஏ., தஞ்சை மாநகரக் கழக செயலாளர் மேயர் சண்.இராமநாதன், மாநில மருத்துவ அணி துணைச் செயலாளர் துணை மேயர் அஞ்சுகம் பூபதி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் து.செல்வம், எம். இராமசந்திரன், கே.டி. மகேஷ்கிருஷ்ணசாமி, மாநில நிர்வாகிகள், சி. இறைவன், த.காரல் மார்க்ஸ், எஸ்.ஜித்து, கு.பரசுராமன், மாவட்டக் கழக நிர்வாகிகள் எல்.ஜி. அண்ணா, எஸ்.என்.மணிமாறன், அ.புண்ணிய மூர்த்தி, கனகவள்ளி பாலாஜி மற்றும் ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர்க் கழகச் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், மருத்துவ அணி நிர்வாகிகள் கலந்துக்கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.